Registered as a News... பக்கங்கள் 04 விலை ரூபா: 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 08 (20-02-1992) வியாழக்கிழமை ஓசை: 02

## வெற்றுச்சாக்கிற்குதடை; விவசாயிகள் பாதிப்பு

வடபகுதிக்குள் வெற்றுச் சாக்கு கொண்டு செல்வதைஇராணுவம் தடைசெய்திருப்பதை அடுத்துதற் போது விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். வட பகுதியில் தற்போது அறுவடைக் காலம் என்பதால் விளை பொருள்களை மூடை கட்டி விநியோகம் செய்வதற்கும், வீடுகளில் சேமித்து வைப்பதற்கும் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். வவனியா பேயாடி கூழாங்குளம் சிறிலங்கா இராணுவத்தின் சோதனை முகா [4ஆம் பக்கம் பார்க்க]

# கிறிஸ்தவ திருச்சபை தலைவர்கள் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் வருவர்

## பௌத்த பிக்குகளும் உடன் வரலாம் அரசியல் தீர்வு குறித்து புலிகளுடன் பேச்சு

(கொழும்பு)

**நல்லெண்ண சமாதானத் தூது ஒன்றை மேற்கொண்டு கிறிஸ்தவ திருச்சபையின் தலைவர்களும், பௌத்த குருமார் சிலரும் இம் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள். தமிழ் மக்களின் நிலைமையை நேரில் கண்டறியவும், விடுதலைப் புலிகளை சந்தித்து அரசியல் தீர்வு குறித்து பேச்சுக்களை நடத்தவுமே இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் இங்கு வருகிறார்கள்.**

இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவிற்கு முன்னாள் மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் வண. சோமா பெரேரா தலைமைவகிப்பார். இவர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களை சந்தித்ததுடன் யாழ். மக்களின் நிலைமையையும் அறிந்து சென்றார். கொழும்பு திரும்பியதும் தமிழ் மக்களின் நிலைமைபற்றியும் புலிகளின் அரசியல் நிலைப்பாடு பற்றியும் உலகப் பத்திரிகையாளர்களிடம் எடுத்து விளக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வண. சோமா பெரேராவுடன் ஆங்கில திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் ரெஜி பெரேரா, கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த வண. போல் காஸ்பர்ஸ், மெதடிஸ்த திருச்சபையின் உபதலைவர் ஏவோன்ஸ் பேர்னினஸ் ஆகியோர் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இவர்கள் தமது விஜயத்தின் போது சில பௌத்த குருமாரையும் அழைத்துவர திட்டமிட்டிருக்கிறார்கள். ஆயினும் பௌத்த குருமாரை இங்கு (2ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் படைகுவிப்பு பெரும் தாக்குதல் முஸ்தீபு

(வவுனியா)

அனுராதபுரம் நகரப் பகுதியில் ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள்ஏராளம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பல நவீனரக இராணுவத் தளபாடங்களுடன் அனுராதபுரம் நகரப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் எந்த நேரமும் வடபகுதியில் பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு ஆயத்தமாக இருப்பதாக அறியப்படுகிறது.

பிந்திய செய்தியின் படி. பொதுமக்களின் பல லொறிகளையும் இராணுவத்தினர் கைப்பற்றி வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது

ஏற்கனவே வவுனியாவில் ஏராளமான இராணுவப்படையினர் குவிக்கப்பட்டிருப்பதும், சீனாவிடம் இருந்து பெறப்பட்ட இராணுவத்தள (4ஆம் பக்கம் பார்க்க)

## தேசத் துரோகிகள் புரிந்த குற்றங்கள்

விடுதலைப் புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்ட தேசத் துரோகிகள் புரிந்த குற்றங்கள் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பின்வரும் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தோனி பிரகாசம் (பண்ணங்கண்டி, வட்டக்கச்சி, கிளிநொச்சி) என்பவர் 1990 இல் கொழும்பு சென்ற சமயம் இவரது மைத்துனரான இராணுவச் சிப்பாய் ரூபன் பத்திராஜவுடன் தொடர்பு கொண்டு, பண்டிவிரிச்சானிலுள்ள விடுதலைப் புலிகள் முகாம், மன்னார் செல்லும் (2ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முன்னிலையில் தேசத்துரோகிகள்

தேசத்துரோகம்புரிந்த நால்வரும் நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பொது மக்கள்முன்நிறுத்தப்பட்டனர். திருநெல்வேலி, சுன்னாகம், (4ஆம் பக்கம் பார்க்க)



ஈழநாதம் மக்கள் தினசரியின் இரண்டாவது ஆண்டு நிறைவினை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு.யோகி அவர்கள் நேற்று பரிசில்களை வழங்கினார்.

மேலிருந்து கீழாக கருத்துப்படப்போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற இணையிலான் பரிசுபெறுவதையும் சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடத்தைப்பெற்ற திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் பரிசு பெறுவதை அடுத்த படத்திலும் கவிதைப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற செல்வி திருமகள் செல்வி குணரத்தினம் பரிசு பெறுவதை கீழுள்ள படத்திலும் காணலாம்.

'ஈழநாதம்' மக்கள் தினசரி இரண்டாவது நிறைவை முன்னிட்டு நேரிலும், கடித மூலமும் பிற வழிகளிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேசத் துரோகிகளை ஒருபோதும் புலிகள் மன்னிக்கமாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

மக்களின் ஆதரவுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த நேரத்தில் ஒருசில புல்லுருவிகளால் எமது போராட்டம் காட்டிக்கொடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மக்கள் முன்னணிச் செயலகத்தில், தேசத்துரோகிகள் நால்வருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டதளபதி செந்தாளன், பொஸ்கோ, ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

அவர் மேலும் கூறுகையில், ஒட்டுமொத்தமாக எமது போராட்டம் வளர்ச்சியடைந்து வருகையில் இத்தகைய செயல்கள் மன்னிக்கப்பட முடியாதது. இந்த தேசத் துரோகிகள் எதிரியை விட மோசமானவர்கள். நண்பர்கள் போல் நடித்து மக்களின் அழிவிற்கு வழி வகுக்கிறார் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### ஸ்ரெப்லேசர் தேவை

2000 W ஸ்ரெப்லேசர் (படிகுறை, படிகூட்டு மாற்றி) தேவை. யாழ் பழைய புத்தகக் கடை, 32, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம் (சி/3935)


### கிறிஸ்தவ

அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவிக்குமா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இந்த நல்லெண்ண தூதுக் குழு யாழ்ப்பாணத்தில் சில தினங்கள்வரை தங்கிநிற்கும். அப்பொழுது விடுதலைப் புலிகளை சந்தித்து அண்மையில் நிகழ்ந்த ஹொங்கொங் மாநாட்டு தீர்மானங்களை கையளிப்பர். அத்துடன் போர்நிறுத்தம்கொண்டுவருவது பற்றியும் அரசியல் தீர்வுகுறித்தும் புலிகளுடன் பேசுவர்.


## யாழ் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-03-06 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உடலமைப்பியலில்
தற்காலிக
உதவி விரிவுரையாளர்

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக
உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதம் ஒன்றுக்கு [நிலையானது]

1. மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்கலைக் கழக தாபனக்கிளையின்உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல்வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில்பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23X10 ச. மீறறர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

-பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-02-18. [சி3944]


### தேசத் துரோகிகள்

வழியிலுள்ள மாவீரர் மயானத்திற்கு அண்மையிலுள்ள முகாம் அங்குள்ள போராளிகளின் தொகை பற்றியதகவல், பூநகரி பாதையில் உள்ள முகாம்கள், வட்டக்கட்சி விவசாயப் பண்ணையில் அமைந்துள்ள இரண்டு முகாம்கள், வட்டக்கட்சி பிரதேச அலுவலகம் கிளிநொச்சி தளத்திற்கு அண்மையிலுள்ள முகாம்கள், திருவையாறு கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள முகாம், பரவிப்பாஞ்சான் முகாம் முதலியன பற்றிய வரைபடக் குறிப்புகளை கொடுத்துள்ளார். வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வரைக்கும், வவுனியாவிலிருந்து மடுவரைக்கும் உள்ள பிரதான வீதியின் நிலைமையினை கூறியுள்ளார். வவுனியா பிரதேச பொறுப்பாளரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது இராணுவத்தால் வழங்கப்பட்ட பாஸ் மற்றும் ஆவணங்களை எரித்துவிட்டார்.

இராணுவம் கொடுத்திருந்த பாஸ்களைப் பயன்படுத்தி பொருட்களை கொண்டுவந்ததுடன் 4000 ரூபா பணத்தினையும் பெற்றுள்ளார்.

மனுவேல் மரியகென்ராட் (திருநகர், கிளிநொச்சி) தனது சகோதரி வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தைப் பெறுவதற்காக கொழும்பில் தங்கியிருந்தபோது அரச உளவு அமைப்பாளரின் தொடர்பு ஏற்பட்டது.

அப்பொழுது தனது வீட்டிற்கு அருகில் இருந்த விடுதலைப் புலிகள் மகளிர் முகாம் விடுதலைப் புலிகள் முகாம், என்பனவற்றின் விபரங்களை கொடுத்தார். பின்னர் திருகர் பிரதான வீதி முகாம், கணேசபுரம் முகாம், சேவையர் கடைச்சந்தி முகாம், பரவிப்பாஞ்சான் முகாம் என்பண பற்றிய அமைவிட வரைபடக் குறிப்பைக் கொடுத்துள்ளார்.

இக் காட்டிக் கொடுப்புகளுக்காக அரச உளவு அமைப்பாளரிடமிருந்து ரூபா எண்ணாயிரம் பெற்றுள்ளார்.

இராமலிங்கம் மகேஸ்வரன் (கம்பர்மலை, வல்வெட்டித்துறை) 1960 ஆம் ஆண்டு பொலிஸில் இணைந்து 1963 வரை செயற்பட்டு பின்னர் எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராககடமையாற்றியுள்ளார். 1990, 91 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் கூட்டுப்படைத் தலைமையலுவலகத்தில் மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்காக அனுமதி எடுக்கச் சென்றதால் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

அல்லைப்பிட்டிச்சந்தி விடுதலைப்புலிகள் முகாம் மண்கும்பான் சந்தி முகாம், வேலணை முகாம், நாவலர் வீதி முகாம், நல்லூர் பருத்தித்துறை வீதி முகாம், திருநெல்வேலி முகாம் ஆகியவற்றின் அமைவிடவரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார்.

அதிகலாபம் தரும் மண்ணெண்ணெய் வியாபார நலனுக்காக இக்காட்டிக் கொடுப்புகளை செய்துள்ளார்.

முருகேசு தர்மராஜன் (கணேசபுரம் கிளிநொச்சி) 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று பனாகொட இராணுவ முகாமில் கடமையாற்றினார்.

1986 காலப் பகுதியில் மன்னார் போக்குவரத்துச் சேவையில் கடமையாற்றிய போது இவருடன் முன்பு கடமையாற்றிய இராணுவச் சிப்பாய் பிரேமரட்ணாவுடன் தொடர்பு ஏற்பட்டது. அக்காலத்தில் விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொடுத்தார். வட்டக்கச்சி விடுதலைப் புலிகள் முகாம் உருத்திரபுரம் கூழாவடிப்பகுதி முகாம் என்பனபற்றிய அமைவிட வரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார்.

1987 காலப்பகுதியில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி இராணுவம் செல்வதற்குரியவாறு விடுதலைப் புலிகளின் காவலரண்கள், பாதைகள் பற்றிய தெளிவான வரைபடக் குறிப்பினை கொடுத்துள்ளார்.

1991 முற்பகுதியில் இவரது தொடர்பாளரான சிப்பாய் பிரேமரட்ணா ஊடாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கிளிநொச்சி சேவியர்கடைச் சந்தி மக்கள் முன்னணி அலுவலகம், கிளிநொச்சி மாவீரர் மயானத்திற்கு முன்பாகவுள்ள மக்கள் முன்னணிச் செயலகம் ஆகியவற்றின் அமைவிட வரைபடக் குறிப்புகள், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குஅண்மையிலுள்ள முகாம், ஜெயந்திநகர் வாகனம் நிறுத்துமிடம், பரவிப்பாஞ்சான் முகாம், உருத்திரபுரம் கூழாவடியிலுள்ளமுகாம் ஆகியன பற்றிய அமைவிட வரைபடக் குறிப்புகள் என்பவற்றை கொடுத்துள்ளார்.

1991பிற்பகுதியில் பிரேமரட்னாவினால் தொடர்புபடுத்தப்பட்ட கேர்ணல் செனவிரட்ன என்பவருக்குப்பின்வரும் தகவல்களைக் கொடுத்துள்ளார். திருநகர் மஞ்சுளா பேக்கரிக்கு முன்னாலுள்ள விடுதலைப்புலிகள் முகாம், குஞ்சுப்பரந்தன் சந்தி முகாம், திருநகர் வாகனம் திருத்துமிடம், திருநகரிலுள்ள முகாம், ஓமந்தை மக்கள் முன்னணிப் பிரதேசக் காரியாலயம் என்பன பற்றிய அமைவிட வரைபடக் குறிப்புக்களைக் கொடுத்துள்ளார்.

ஆனையிறவு இராணுவ முகாம்தாக்குதல்நடத்த முன்பு விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுவந்த தாக்குதல் ஒழுங்குகள்பற்றிய தகவல்களைச் சேகரித்துக்கொடுப்பதில் முனைப்பாகச் செயற்பட்டார்.

ஏனைய உளவாளிகள் மூலம் கூட்டுப்படைத் தலைமையலுவலகத்திற்குக் கிடைக்கும் தகவல்களை இவர் உறுதிப்படுத்திக்கொடுப்பார். இவ்வாறான காட்டிக்கொடுப்புகளால்இவர் பெற்றுக்கொண்ட சலுகைகள் பணமாக ரூபா இருபத்தையாயிரம் பெற்றுள்ளார்.

சிறிலங்காஇராணுவத்திடம் இருந்து உழவுயந்திரம் ஒன்று பெற்றுள்ளார். இது தற்போது இவரது வீட்டிலிருந்து விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இராணுவம் பறிமுதல்செய்யும் தமிழ்மக்களின் வாகனங்களை உரிமையாளர் பெற்றுக் கொள்வதற்குத் தரகராகச் செயற்பட்டுப் பணம் சம்பாதித்துள்ளார்.

### பசறையில் புதிய பொலிஸ் நிலையம

பசறை பகுதியிலுள்ள மடுல் சீமை றோபரி தோட்டத்தில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.


## வனிக்கா மெடிக்கல்ஸ்

**274/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

எமது ஸ்தாபனத்தின் மருந்து விநியோகம் நடைபெறவுள்ளது. தனியார் வைத்தியர்கள், வைத்திய சாலைகள், மருத்துவச்சாலைகள் எம்மோடு உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்

(2219)



## "மாபெரும் இன்னிசை மாலை'

ஸப்தஸ்வரம் இசைக்கல்லூரியின்
திறப்புவிழாவை முன்னிட்டு

## "ஸப்தஸ் வரா"

இசைக் குழுவின்
இன்னிசை வார்ப்புகள்


இடம்:- அரியாலை காசிப்பிள்ளை அரங்கு
காலம்:- (20-2-92) இன்று மாலை 7 மணி
பிரவேசம்:- இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(2223) - நிர்வாகம்


## 31-ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு |
|---|---|
| 22 | 22 |
| - | - |
| 06 | 01 |
| - | - |
| 1936 | 1992 |



### அமரர் மூத்ததம்பி சதாசிவம்

அமரர் சதாசிவம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை (21-02-1992) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கடற்கிரி
அளவெட்டி வடக்கு

மனைவி, பிள்ளைகள்

(2221)

## நினைவு கூருகின்றோம்

**1992-02-20**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பால முனையில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**அருட்செல்வம்** (சங்கரப்பிள்ளை அருட்செல்வம் -மண்டூர்)

தட்டாதெருச்சந்தியில் தேசவிரோதிகளுடனான மோதலின்போது வீரச்சாவெய்திய

**சுரேன்** (திருச்சிற்றம்பலம் சுரேந்திரன்-சிவரஞ்சனிவீதி, நாயன்மார்கட்டு)

தங்கவேலாயுதபுரம் உடும்பன்குளம் ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட, வயலில் வேலை செய்து கொண்டிருந்த 106 பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு தேசவிரோதிகளுடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**பாண்டியன்** (அருள் டேவிற் - தாழங்குடா, மட்டக்களப்பு)

1989-ம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 பொதுமக்கள்

நல்லூரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன்

1990 ஆம் ஆண்டு அம்பாறை மல்வத்தையில் போர் நிறுத்தம் அமுலில் இருந்த வேளையில் சிறிலங்காப் படையினர் கைது செய்ய முற்பட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2-ம்லெப். தரணி** (கிருஷ்ணபிள்ளை சுந்தரலிங்கம் -கிரான், மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

## சிந்தனைக்கு

சுகபோகம் மனித இனத்தையே அழிக்கின்றது. அது ஒரு வேளையில், உடலையும், மனத்தையும் மாசுபடுத்துகிறது.

-ஜான் க்ரெளன்-


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


## சிறிலங்கா அரசின் புதிய புரளி

வடக்கு, கிழக்கிலிருந்து கொழும்பிற்கு சென்ற மக்கள் வாழும், பகுதிகளில் பொலிசார் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். குண்டுத்தாக்குதல் நடத்த புலிகள் கொழும்பில் ஊடுருவி இருப்பதாக, வெளியிடப்பட்ட உளவு அறிக்கையை அடுத்தே இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தேடுதலின் போது, நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது தெற்கில் மேலும் இனவாதத்திற்கு தூண்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ள சதி நடவடிக்கையாகும். அதாவது எதிர்க்கட்சிகளின் இனவாதக் கோசங்களிலும், ஏனைய பொருளாதார, அரசியல் நெருக்கடியினால், அண்மையில் தெற்கில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம் எதிரிகளைவிட இனவாதம் பேசி அரசியல் ஆதாயம் தேடப்பார்க்கின்றது. இது இன்று மட்டும் நடைபெறும் விவகாரமல்ல. கால காலமாக சிங்களப் பேரினவாதிகள் இதையே மேற்கொண்டுள்ளனர்.

தொண்டமானின் சமசரத் திட்டத்தை தமிழருக்கு தமிழ் நாடுவழங்குவதற்கு ஒப்பானது என கூக்குரலிட்டவர்கள், புலிகள் மலையகத்தில் ஊடுருவிவிட்டார்கள் எனக் கூக்குரலிட்டார்கள். சிறிலங்கா பேரினவாத அரசாங்கமும் அதைத் தட்டிக்களிக்க முடியாமல் மலையகத்தில் பெரும் இராணுவ நடவடிக்கைகளையும், முஸ்தீபுகளையும் நடத்தியது. ஆனால், பயன் ஏதும் ஏற்பட்டதாக இல்லை. மலையக தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத் தீயை ஊட்டிவிட்டதாகவே முடிந்தது.

எதிர்த்தரப்புப் பேரினவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட பேரினவாத கூச்சல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சில பின்னடைவுகளை ஏற்படுத்தின. அத்தோடு, தனியார் மயமாக்கல், நிதி உதவி வழங்கும் நாடுகளின் அரசியல் தீர்விற்கான நிபந்தனைகள் என்பன அரசாங்கத்திற்கு சில இடைஞ்சல்களை ஏற்படுத்தின மேலும் விடுதலைப் புலிகள் குடாநாட்டிற்கு வெளியில் நடாத்திய இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்திய தாக்குதல்கள் அரசாங்கத்திற்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இந்நிலையில் அரசாங்கம், மீண்டும் தனது இனவாதத்தை கையில் எடுத்துக் கொண்டுள்ளது; இதன் வெளிப்பாடே கொழும்பில் புலிகள் என்ற அறிவிப்பாகும்.

கொழும்பில் புலிகள் என்ற புரளியைக் கிளப்புவதன் மூலம், எதிரிகளின் இனவாதம் உச்ச நிலைக்குக் கிளம்பி இலாபம் அடைய முற்படுவதோடு, சர்வதேச அழுத்தங்களையும் கொழும்பில் புலிகளின் அச்சுறுத்தல் எனக் காரணம் காட்டி ஐ தே.கட்சி இனப்பிரச்சினைத் தீர்வைத் தட்டிக்கழிக்கப் பார்க்கின்றது.

## தோட்டத் தொழிலாளருக்கு 28 நாள் வேலை வேண்டும்

[கொழும்பு]

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம்இருபத்தைந்துநாட்களுக்கு குறையாமல் வேலை வழங்கப்படும் என்று இ. தொ. கா. வின் தேசிய சபைக் கூட்டத்தில் பேசிய இ. தொ. கா தலைவர் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இ.தொ.கா. வின் நீண்டகாலக் கோரிக்கையொன்றுக்கு அரசாங்கம் இப்போது அங்கீகாரம் அளித்துள்ளதாகவும், விரைவில் இது நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவித்தார். இதன்படி இருபத்தைந்து நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும் அல்லது அதற்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்என்று தெரிவித்தார்.

## வவு. கிராமப்புறங்களுக்கு பழுதடைந்த திரிபோசா

(வவுனியா)

வவுனியா அரசாங்க அதிபரினால், வவுனியா கிராமப்புறங்களில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பொதுமக்களுக்குப் பழுதடைந்த திரிபோசா மா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த மா, 90-ம் ஆண்டைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் கூட்டுறவுச் சங்க லொறிகள் மூலம் வேறுசில பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை விநியோகம்செய்வதற்கு, கூட்டுறவுச்சங்கமும், கிராமசேவையாளர்களும் பின்நிற்பதாக அறியப்பட்டது.

# உதவி என்ற பெயரால் பொருளாதார குடியேற்றம்

### உலக வங்கி மீது தொழிற்சங்கங்கள் கண்டனம்

(கொழும்பு)

உதவி என்ற பெயரில் பல்தேசியக் கம்பனிகள் மூலமாகச் சிறிலங்காவில் பொருளாதாரக் குடியேற்றத்தை அமைக்க வழிகோலும் உலக வங்கியின் திட்டங்களை நிராகரிக்குமாறு தபால் தந்தித் தொடர்பு ஊழியர்களின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜி. எம். எ. சில்வா வெளியிட்டுள்ளஅறிக்கையில், நிதி உதவி வழங்குவதற்கான முன் நிபந்தனையாக வேலை வழங்கும்போது விதிக்கப்படும் நிபந்தனைகளை நீக்குமாறும், அரச வங்கிகளையும், தோட்டங்களையும் வர்த்தகமயமாக்கும் படியும் உலக வங்கி சிறிலங்கா அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு உதவி செய்வது என்ற உலக வங்கியின் திட்டம் உண்மையில் தொழிலார்களின் உரிமைகளை அடக்குவதோடு பல்தேசியக் கம்பனிகளும், பெரும் முதலாளிகளும்இணைந்து தொழிலாளர்களை நசுக்கி உச்ச வருமானத்தைப் பெறும் நோக்கம் கொண்டது. இது சிறிலங்காவுக்கு மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று கருத முடியாது. அனைத்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் நிலைமை இப்படித்தான் உள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

இதே வேளை, இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சிறிலங்கா அரசு, நடைமுறையில் உள்ள தொழிற்சங்க சட்டங்களைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும், மற்றும் பல்தேசிய நிறுவனங்களும் தொழிற் திட்டங்களைஅகற்றுமாறு சிறிலங்கா அரசை வற்புறுத்துவதாலேயே அரசுஇந்த முயற்சியில் இறங்கியிருப்பதாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி, பாரம்பரிய வைத்தியர்கள் ஆகியோர்களின் நலன் கருதி, வட-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் மாற்றுமுறை மருத்துவப் பிரிவுக்கு பிரதிப்பணிப்பாளராகத் தற்போது கடமையாற்றும் வைத்திய கலாநிதி ப.உரோமகேஸ்வரன் அவர்களுடன் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9·00 மணிக்கு கண்டி வீதியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில்நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட பகுதிக்குள் அடங்கும் சகல வைத்தியர்களும் தவறாது இக் கலந்துரையாடலில் பங்குபற்றும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## நல்லூர் பிரதேச சபை சுகாதார வாரம் ஆரம்பம்

நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வாரம் கடந்த திங்கட்கிழமை காலை கொக்குவில்சந்தியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து.வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி வைக்க பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த பொதுப்பணிமன்றங்கள், யாழ் இந்துக்கல்லூரி, 'வியோ கழகம்', கொக்குவில் இந்துக்கல்லூரி, 'இன்ரறக்ற் கழகம்' ஆகியவற்றின் தொண்டர்களும், இப்பாடசாலைகளின் மாணவர்களும், பிரதேசசபை ஊழியர்களும் இதில் பங்குபற்றினர். அன்றைய தினம அரை மைல் நீளமான வாய்க்கால் துப்புரவு செய்யப்பட்டது.

பொதுச்சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளில் தமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல பொதுப்பணி மன்றங்களும் பிரதேசம் முழுவதிலும் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் பொதுமக்களின் உதவியுடன் இம்மாதம் 23 ஆம் திகதிவரை வேலைகளில் ஈடுபடுவார்கள் என்றும் விசேட ஆணையாளர் தெரிவித்தார்.

## "வாராத வெற்றியெல்லாம் வந்துனது தாழ்பணியும்"

பதியினைப் பிரிந்து கூடும் பத்தினி மகிழ்விற் கொப்ப
வதிவிடம் சீராய்ப் பெற்ற வடகிழக்ககதிக் கொப்ப
கதிரவன் வரவைக் கண்ட கமலத்தின் மலர்வுக்கொப்ப
புதியதோர் எழுச்சிக் கீழ நாதத்தைக் கூறலாமே.

கல்லெறிபட்டுக் காகம் கலைந்திடும் காட்சிக் கொப்பாய்
நல்''தலையங் கத் தா லே'' நமதையம் ஓடிப்போகும்
பல்சுவையன்னம் கிட்டிப் பறந்திடும் பசியிற்கொப்பாய்
சொல்லுமுன் கருத்துகண்டு சோர்வெலாம் ஓடிப்போகும்.

சிரிப்புடன் சிந்தனைக்கு செட்டான உனது கார்ட்டூன்
நெருப்புடன் பெற்றோலாக நெஞ்சிலே பற்றிக் கொள்ளும்
குறுமுனி கடலை அள்ளிக் குடித்ததை நம்பாதோருன்
சிறுபடம் நிறையச்சேதி சொல்வதை ஏற்றுக்கொள்வர்.

மண்ணினை நேசித்திந்த மண்ணிலே மரணித்தோரை
எண்ணியே நித்த நித்தம் எடுத்தவர் புகழைக்கூறி
கண்ணியமாக அன்னார்க் கஞ்சலி செய்யும் பாங்கு
விண்ணிலும் விரிந்த நெஞ்சின் விதமதை எமக்குக் காட்டும்.

வண்ணப் படங்களுடன் வகைதொகையாய் 'புவத்'சேதி
கண்ணைக் கவருமிளங் கன்னிபடம் கதைகளுடன்
எண்ணிக்கையில் அதிகம் எழுந்துலவும் இவையெல்லாம்
எண்ணத்தால் மலடுகளே எமக்கதனால் ஏதுபயன்?

புழுதான் என்றெம்மைப் புண்படுத்த வந்தவர்கள்
புலிதான் இவர்களெனப் புறமுதுகு காட்டியதும்
எழுத்தால் நீ செய்திட்ட ரசவாதம் அறிவாலே
பழுத்தவர்கள் வியந்து பாராட்டும் ஈழநாதம்.

ஈராண்டகவை பெறும் இளையவனே ஆயினும் நீ
சோராது எம்மவர்க்குச் சொல்லாலே அறிவூட்டிப்
பாராண்ட எம்மினத்தை பண்டை நிலை காணச்செய்
வாராத வெற்றியெல்லாம் வந்துனது தாழ்பணியும்.

- சக்தி சரவணா

# அம்பாறையில் புதியமாவட்டம்? முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(அம்பாறை)

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கிழக்கில் அம்பாறையில் கரையோர மாவட்டமொன்று நிறுவப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமொன்றை அம்பாறை மாவட்ட பிரதேச சபைகளின் முஸ்லிம் காங்கிரஸ் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

இத் தீர்மானத்தில் மேலும் கிழக்கில்-குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் காலங்காலமாக பல்வேறு நிர்வாக நடைமுறைச் சிக்கல்களினால் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் அம்பாறை கச்சேரிக்கு சென்று தமது தாய் மொழியில் கருமங்களைச் செய்விக்க முடியாமல் தவிக்கிறார்கள் பாரபட்சங்களுக்குள்ளாக்கப்படுகின்றார்கள். இத்தகைய நெருக்கடிகளைத் தவிர்க்க அம்பாறையில் கரையோர மாவட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இந்திய கடற்படைத் தளபதி மலே. அமைச்சருடன் பேச்சு

(கோலாலம்பூர்)

இந்தியக் கடற்படைத் தளபதி எல். ராம்தாஸ் மலேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள், முப்படைத்தளபதி ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார் இப் பேச்சுக்களின் போது இருதரப்பு விவகாரங்கள் மற்றும் இந்து சமுத்திரப் பகுதியில் கண்காணிப்பு போன்ற விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

## கப்பல் வெடி விபத்தில் 5பேர் பலி, 16பேர் காயம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் கடற்பிராந்தியத்திற்கு அப்பால் இரசாயனங்களை ஏற்றிச்சென்ற கப்பலொன்று வெடிவிபத்துக்கு உள்ளாகியதில் குறைந்தது 5 பேர் பலியாகினர். 16 பேர் காயமடைந்தனர். சடலங்களை தேடுவதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

ஜப்பானுக்குச் சொந்தமான இந்தக்கப்பல் சிங்கப்பூர் கடல் பிராந்தியத்திற்கு அப்பால் பழுதுபார்க்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது இந்த வெடி விபத்து ஏற்பட்டது. விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவில்லை.

இந்தக் கப்பலில் ஜப்பான். சிங்கப்பூர், கொரியா நாட்டு மாலுமிகள் வேலைக்கமர்த்தப்பட்டு இருந்தனர்.

### கும்பகோண விபத்து

## நீதிமன்ற விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவு

(சென்னை)

கும்பகோணத்தில் நேற்று முன்தினம் மகாமகம் திருவிழாவின் போது ஏற்பட்ட விபத்து சம்பவம் பற்றி நீதிமன்ற விசாரணை நடத்தும்படி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உட்பட இருபத்தைந்து லட்சம்பேர் கலந்து கொண்ட விழாவில் நாற்பத்தெட்டுப்பேர் பலியானது தெரிந்ததே.

இதனைத்தொடர்ந்தே தமிழக அரசு நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக தி. மு. க. கட்சியின் தலைவர் மு. கருணாநிதி நீதிமன்ற விசாரணை ஒன்றை நடத்தும்படி கோரி அறிக்கை ஒன்றைநேற்றுமுன்தினம்இரவு விடுத்திருந்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: இவ்விழாவிற்கு போதிய ஏற்பாடுகள் செய்யப்படாததாலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் இந்த விபத்தில் உயிர்இழந்தவர்களுக்கு25,000 ரூபா நஷ்டஈடும், காயமடைந்தவர்களுக்கு 5,000 ரூபாவும் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## ஜே.கே.எல்.எப். அமைப்பை தடைசெய்ய வேண்டிவரும்

### பாகிஸ்தான் எச்சரிக்கை

(முசாகராபாத்)

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினர் தொடர்ந்து சிக்கல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் அந்த அமைப்பைத் தடைசெய்ய வேண்டிவரும் என பாகிஸ்தான் ஆளுகையில் உள்ள ஆசாத் காஷ்மீரின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை முசாகராபாத் பகுதியிலிருந்து ஆசாத் காஷ்மீர் முதல்வரான சர்தார் அப்துல் கயூம் ராயிடருக்கு அளித்த பேட்டியில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கருகே கடந்த புதனன்று நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னர், ஜே.கே.எல். எப். பினர் தீயிடல், அழித்தல் முதலிய நாசகார செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

---

**மக்கள்**

பண்டத்தரிப்பு, குருநகர், மானிப்பாய் பகுதிகளில்பொது மக்கள் முன் நிறுத்தப்பட்டதோடு, இவர்கள் ஒவ்வொருவரும் புரிந்த குற்றங்களும் தனித்தனியே பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் இதுபோன்றசெயல்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தோன்ற வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இச்சந்தர்ப்பங்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி நின்று இந்தத் தேசத்துரோகிகளின் நடவடிக்கைகள் பற்றி கேட்டு அறிந்து கொண்டதுடன், துரோகச் செயல்களுக்கு எதிராக மக்கள் ஆவேசமுற்று ஆத்திரப்பட்டதையும்அவதானிக்கமுடிந்தது.

மேலும் இதுதொடர்பாக 'தேசத் துரோகிகள் மன்னிக்கப்படமாட்டார்கள்' என்ற தலைப்பிலான துண்டுப்பிரமும் பரவலாக மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

---

**அநுராத**

பாடங்கள் கொண்டுவரப்பட்டமையும் தெரிந்ததே.

வவுனியா மாவட்ட கிராமப்புறப் பகுதிகளில் தொடர்ச்சியாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## காத்தான்குடியில் இரவில் நடமாடத் தடை

(மட்டக்களப்பு)

காத்தான் குடி பொலிஸ் வட்டாரத்தில் இரவு 10.00 மணிக்குப் பின்னர் வெளியே நடமாடுபவர்கள் கைது செய்யப்படுவர் என சிறிலங்காவின் கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்

காத்தான் குடியில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் கொள்ளை நடவடிக்கைகளை முறியடிப்பதற்கே இந்த தீர்மானம் எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தர மாணவர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

நடேஸ்வராக்கல்லூரியில் கல்விகற்று தற்போது இடம் பெயர்ந்து வேறுபாடசாலைகளில் கல்விகற்றுவரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை [1992] இற்கு தோற்றவுள்ள சகல மாணவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை மேற்படி கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி கல்லூரி தற்போது சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இயங்கிவருவது தெரிந்ததே. (ச)

---

**தேச**

கள். இவர்கள் கொடுக்கும் தகவல்கள்தான் விமானக் குண்டு வீச்சுகளுக்கும் அப்பாவி மக்கள் கைதாவதற்கும் காரணமாக இருக்கிறது. தேசத்துரோகிகளுக்கு உலக நாடுகளில் மரணதண்டனை விதிக்கப்படுகிறது என்றார்.

முருகேசு தர்மராஜன்(கணேசபுரம் கிளிநொச்சி வயது 45), அந்தோணி பிரகாசம்(வட்டக்கச்சி கிளிநொச்சி - வயது 45), மனுவேல் மரியகென்ராட் (திருநகர், கிளிநொச்சி-வயது 41), இராமலிங்கம் மகேஸ்வரன் (கம்பர்மலை, வல்வெட்டித்துறை வயது 54) ஆகியோருக்கு தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பணத்திற்காகவும், சில சலுகைகளுக்காகவும், போராளிகளின் முகாம்களின் வரைபடங்கள், அமைவிடங்கள் என்பவற்றைக் காட்டிக் கொடுத்தமை ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

திரு. பொஸ்கோ கூறுகையில், இவ்வளவு காலமும் தேசத்துரோகக் குற்றச்சாட்டிற்காக கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின்பெற்றோர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த தண்டனைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை மக்கள் மத்தியில் உளவாளிகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உளவாளிகளுக்கு படிப்பினையாக அமையவேண்டும் என்பதற்காகவும் இந்த நால்வருக்கும் வழங்கப்பட்ட தண்டனை பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது என்றார்.

சிலர் தமக்குத் தெரியாத நபர்களுடன் பொறுப்பற்ற விதத்தில் கதைப்பதன் மூலம் உளவாளிகளுக்கு சில தகவல்களை தம்மையறியாமலே வழங்கி விடுகின்றனர். இவ்வாறான செயல்கள் தவிர்க்கப் படவேண்டும்.

மக்கள் உளவாளிகள் குறித்து அவதானமாக இருப்பதுடன் அவர்கள் பற்றிய தகவல்களை அருகிலுள்ள பிரதேச காரியாலயங்களிற்கு அறிவிப்பதன் மூலம் உளவாளிகளை கண்டுபிடிக்க உதவி செய்யலாம் எனமேலும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் முருகேசு தர்மராஜன் என்பவருக்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் கிளிநொச்சி பிரதேச காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

## வவுனியா, இயக்கச்சியில் விமானக் குண்டு வீச்சு

இயக்கச்சியிலும், வவுனியாவிலும் நேற்று குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தன. வவுனியா மதினா நகரில் நடைபெற்ற குண்டுவீச்சினால் கந்தன் என்பவரது வீடு பலத்த சேதத்திற்குள்ளானது.

## பொன்னாலை மூளாய் மீது பலத்த எறிகணை வீச்சு

மூளாய், பொன்னாலை ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணி முதல் சில மணி நேரம் தொடர்ச்சியாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டது. காரைநகரிலிருந்தும், பலாலி இராணுவ முகாமிலிருந்தும் ஏவப்பட்ட பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்களிடையேவீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதல்களினால் பெரியளவிலான சேதங்கள் ஏற்படாத போதிலும் இப்பகுதிகளில் வாழும் பலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இரவோடிரவாக இடம் பெயர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. (க),(24)

## நாட்டிற்கு எதிராக எதையும் செய்யவில்லை

### - தொண்டா

(கொழும்பு)

''இந்த நாட்டிற்கு எதிராக நான் எதையும்செய்யவில்லை' என இ.தொ கா. தலைவரும் கிராமியத்துறை அமைச்சருமாகிய எஸ். தொண்டமான் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர் ''தோட்ட நிர்வாகங்கள் தனியார் மயமானாலும், தொழிற் சங்க உரிமைகளைத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் அனுபவிப்பர் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் அதிகாரசபை ஒன்றின் கீழ் பராமரிக்கப்படுமெனவும்,

புதிய முகாமையின் கீழ் தேயிலை உற்பத்தி தற்போதிலும்பார்க்க இரட்டிப்பானால் தொழிலாளர் வாழ்வு சிறப்படையும்.நாடும் பயன்பெறும். எனவேதான் நிர்வாக தனியார் மயத்தை ஆதரித்தோம் என்றும் குறிப்பிட்டார்

அததுடன்தோட்டத்தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் வாழும் குடியிருப்புக்கள் அரசாங்கத்தின்கீழ் உள்ள அதிகார சபைக்குக் கீழ் வரும் என்றும்,

அவை தோட்ட நிர்வாகங்களை கையேற்கும் தனியாரிடம் ஒப்படைக்கப்படமாட்டாது என்றும் தொண்டமான் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்

### ஈழநாதம் 2ஆம் ஆண்டுப் போட்டி

## வெற்றி பெற்றோர்களுக்கு யோகி பரிசு வழங்கினார்

(நல்லூர்)

ஈழநாதம் மக்கள் தினசரியின் இரண்டாமாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் நேற்று ஈழநாதம் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு யோகி அவர்களால் வழங்கப்பட்டது.

இப் பரிசளிப்பு வைபவத்தை தொடர்ந்து நடந்த கலந்துரையாடலின் போது எழுதப்படும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படல் வேண்டும் என்று எதிர்பார்ப்பதைவிட புதிய கோணத்தில் ஆராய்வுடன் கூடிய வகையில் சிந்திக்கவும், ஆக்கங்களைப் படைக்கவும் முற்படவேண்டும் என்று திரு.யோகி கேட்டுக்கொண்டார்.

இவ் வைபவத்தில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன், விடுதலைப்புலிகள் பத்திரிகை ஆசிரியர் திரு ரவி, வசந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மகளிர் தினம் அனுஷ்டிப்பு

[யாழ்ப்பாணம்]

சர்வதேச பெண்கள் தினம் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப் படவுள்ளது.

மக்கள் மத்தியில் பெண்கள் உரிமை குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அரச சார்பற்ற மற்றும் சமூக ஸ்தாபனங்களும் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடுமாறு ஐ நா. யாழ். கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பெண்கள் அந்தஸ்து பற்றிய ஐ. நா. ஆணைக்குழு நடப்பாண்டின் பெண்களுக்கெதிராக உண்மையான மற்றும் சட்டவுரிமையால் இழைக்கப்படும் பாகுபாடுகள் பெண்களும் சூழலும் அபிவிருத்தி சமாதானத்தில் பெண்களின் பங்குப் பணி ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தும் என்று தெரியவருகிறது.

---

**வெற்றுச்சாக்கு**

மைத் தாண்டி ஒரு வெற்றுச் சாக்குத் தானும் கொண்டு வருவதற்கு இராணுவம் அனுமதி வழங்கவில்லை.

இதனால்விவசாயிகள்பாதிப்படைவதையிட்டு கமநல சேவைநிலையங்கள் அக்கறை எதுவும் எடுக்கவில்லை.

வன்னிப் பகுதியில் சாக்கு பற்றாக்குறை காரணமாக ஒருசாக்கு75.00ரூபாவிற்குவிற்பனை செய்யப்படுகின்றது. [தி]